# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1868/9 - 2014 ජුනි 23 වැනි සඳුදා - 2014.06.23

*1868/9 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

*2014 ஆம் ஆண்டின் 137 ஆம் இலக்கக் கட்டளை*

எனது குறிப்பு இல. : 4/3/4/2013/டீ/101.
பிரசெ. குறிப்பு இல. : எல்எல்டீ/டீஓசீ(ஜே)/எல்ஏ/கேஆர்வை /01.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
''மிஹிகத மெதுர'',
காணிச் செயலகம்,
ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,
*2014 யூன் 22.*

அட்டவணை

1. காணி எடுத்தல் உத்தியோகத்தர்: காணி எடுத்தல் உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்.

2. காணியின் விபரம் : வட மாகாணத்தில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில், வடமராட்சி தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில், இல. ஜே/ 351, கரணவாய் கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில், கரணவாய் கிராமத்தில் அமைந்துள்ள, யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட 2014.05.08 ஆந் திகதிய வைஏ/ கேஆர்வீ/ 2014/ 28 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு ஏ, பீ, சீ எனக் காட்டப்பட்ட சுமார் 0.1675 ஹெக்டயார் முழு விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட எல்லைகளுள் அமைந்த மூன்று (03) காணித் துண்டுகள் :

**01. துண்டு ''ஏ'' - ஆவளப்புலம் - விஸ்தீரணம் : 0.1434 ஹெக்டயார்**

வடக்கு : முருகேசு கணபதிப்பிள்ளை உரிமை கோரும் காணியும் பொதுக் கிணறும் ; கிழக்கு : பொதுக் கிணறும் துண்டு பீ யும்; தெற்கு : துண்டு பீ யும் நாகரத்தினம் இராசதுரை உரிமை கோரும் காணியும் ; மேற்கு : நாகரத்தினம் இராசதுரை, கே. எஸ். அச்சலிங்கம் ஆகியோர் உரிமை கோரும் காணியும் உரிமை கோருவோர் தெரியாத காணியும்.

**02. துண்டு ''பீ'' - ஆவளப்புலம் - விஸ்தீரணம் : 0.0025 ஹெக்டயார்**

**03. துண்டு ''சீ'' - ஆவளப்புலம் - விஸ்தீரணம் : 0.0216 ஹெக்டயார்**

வடக்கு : அருளானந்தம் சாந்தசொரூபி உரிமை கோரும் காணி ; கிழக்கு : அருளானந்தம் சாந்தசொரூபி உரிமை கோரும் காணியும் பிரதேச சபை வீதியும் ; தெற்கு : பிரதேச சபை வீதியும் நாகரத்தினம் இராசதுரை உரிமை கோரும் காணியும் ; மேற்கு : நாகரத்தினம் இராசதுரை உரிமை கோரும் காணியும் துண்டு பீ யும்.

*07 - 210*